# எதுவுமல்ல எதுவும்

கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணாகரன்

இலங்கையின் வடக்கே இயக்கச்சியில் பிறந்தவர் கருணாகரன். தொடரும் போரினால் பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து அகதியாகி இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அலைந்து கொண்டிருக்கிறார். இதுவரையில் **ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல், ஒரு பயணியின் நிகழ்காலக்குறிப்புகள், பலியாடு** என மூன்று கவிதைத்தொகுப்புகள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவுமல்ல எதுவும்

கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிதைகள் 2006 - 2008
காலப்பகுதியில் எழுதப்பட்டவை.

மகிழ் வெளியீடு - 03

**எதுவுமல்ல எதுவும்**
❖ கவிதைகள்
© கருணாகரன்
முதற்பதிப்பு :-
2010 டிசம்பர்
பக்கவடிவமைப்பு :-
செந்தில்குமரன்
அச்சுப்பதிப்பு :-
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு :-
மகிழ் -
754, கனகராசா வீதி,
கிளிநொச்சி.

விலை :- 200.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமிள்
சு.வி
தேவதேவன்
ஆகியோருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. காயங்கள் நிரம்பிய கூடு 09
02. பூனையின் சித்திரங்கள் 11
03. மாயக்குழல் 14
04. சிநேகம் 16
05. திருக்கோணேஸ்வரம் 18
06. மிஞ்சும் உயிர் 20
07. முகம் - 01 22
08. முகம் - 02 24
09. அந்தரங்கம் 26
10. கனவு 27
11. பாத்திரம் 28
12. எது? 29
13. வீடு 30
14. பூட்டு 32
15. இருளின் வீடு 33
16. தோழி 34
17. முக்காலத்தின் திசைகள் 36
18. மியூசியத்தில் வைக்கப்படும் நாள் 38
19. தொண்டன் 40
20. வேட்டை 42
21. திசையழிவு 44
22. செல்லாத சொற்களோடு 45
23. வழியில் ஒரு நாற்காலி 47
24. எல்லா மனிதர் பற்றிய குறிப்பு 48
25. வளையம் 49
26. துருவத்தில் சுவடெறிதல் 50
27. துப்பாக்கியின் தியானத்தில் 51
28. அரசு 55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. விரலின் தனிமை 57
30. கருணையில்லாத பிணம் 59
31. இனிச் சொல்ல முடியாது 61
32. இரவுக்கரை 63
33. பீரங்கியின் வாய்மொழி 65
34. சூடிய போதில் மாலை 67
35. கடுங்கோடை 70
36. தாமரைக்குளத்தில் இருந்த மனிதர்களும் பூத்த மலர்களும் 72
37. வேட்கை 74
38. வெளி 76
39. மாபெரும் விளம்பரத்தட்டி 77
40. பொம்மைக்கும் கத்திக்கும் தெரிந்தது 79
41. பிரிவு 81
42. மாயப்பூ 82
43. சிறகு முளைத்த குழந்தைகள் 84
44. ஹர்த்தால் 86
45. குளிர் 88
46. சிரிப்பு 90
47. பாளைக்கத்தி 91
48. குளம் 93
49. சலூனில் விட்டுச் சென்றது 95
50. கிழக்குத்தெரு 97
51. தாத்தாவின் தென்னைகள் 98
52. அவன் 99
53. தொலைக்காட்சிப் பெண் 100
54. கானல் 101
55. அலாவுதீன் 104
56. வஞ்சனை 106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

கவிதைகளைச் சேகரித்து தொகுப்பதில் உதவிய
ப.தயாளன் மற்றும்
இந்தக்கவிதைகளை வெளியிட்ட
நிலம், தமிழ் உலகம், ஈழநாதம், வீரகேசரி,
காலச்சுவடு, தீராநதி, வெளிச்சம், தவிர, மறுகா,
காற்றுவெளி
ஆகிய பத்திரிகைகள், இதழ்களுக்கும்
திண்ணை, வார்ப்பு, அப்பால் தமிழ்
இணையத்தளங்களுக்கும்
கூடவே
நிலாந்தனுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயங்கள் நிரம்பிய கூடு

திறக்க முடியாத பூட்டாகத்
தொடரும் மௌனத்துக்கு வெளியே
நிறுத்தப்பட்டிருக்கிறேன்
வெகு நேரம்

எல்லாம் பக்கமும் வாசலுடைய
சிறு கூட்டில்
இருந்த வானத்தை
தன்னோ டெடுத்துச் சென்ற
பறவை
திரும்பவில்லை இன்னும்

அசைகிற சிறு பூவில்
துடிக்கும் ஒளியில்
அழிய முடியாமல் தத்தளிக்கும்
வாசனை மீதமர்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வண்ணத்துப் பூச்சி
தீயாய்

நெருப்பைத்தின்னக் காத்திருந்த
மலர்
வாசனையோடு
நகர்ந்து சென்ற வழியில்
என்னைக்கண்டு திடுக்குற்றது?

அழிய முடியாமல் பெருஞ்சாபத் தோடிருந்த
மௌனத்திற்கிடையில்
விலக முடியாமல்
நானும்
அந்த மலரும்
காயங்கள் நிரம்பிய
கூடும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனையின் சித்திரங்கள்

பூனை என்றவுடன்
உங்கள் நினைவுக்கு வருவது
மியாவ்' என்ற அதன் குரலா
ஓசையற்ற அதன் மிருதுவான நடையா
உடல் சுருக்கி கண்மூடி
பஞ்சுக்குவியலாயிருக்கும் அதன் தோற்றமா?
மரத்தில் தாவித்திரியும்
அணிலைக்குறிவைத்து நோக்கும் அதன் ஒற்றைப்புலனா
ஏதோ ரகசியத்தை கண்டறிந்ததைச் சொல்லும்
அதனுடைய வாலாட்டலா
உங்கள் காலுரசி தோழமைகொள்ளும்
அதன் பிரியமா
எப்போதும் தன் சுத்தம் பற்றி
அக்கறையோடிருக்கும் அதன் குணமா?

அல்லது
பூனை பாஸ்கரனா
பாஸ்கரனின் பூனையா?

(ஓவியர் பாஸ்கரனுக்கு)

2
கண்மூடிக்குவிந்திருக்கும் பூனையின்
தியானத்துள்
விரியும் காட்சிகளென்ன
அலையும் கனவுகளென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3
நீங்கள் புணரும்போது
ரகசியமாகிறீர்கள்
பூனைகள் புணரும்போது ரகசியம் கரைகிறது

எலிகள் புணருகின்றன பூனைகளுக்காக
பூனைகள் புணருகின்றன எலிகளுக்காக

எலிகளும் பூனைகளுமில்லாத உலகம் எப்படியிருக்கும்
மேலும்
எலிகளில்லாத பூனைகளின் உலகமும்
பூனைகளில்லாத எலிகளின் உலகமும்

4
ஒருபோதும் பூனைகளை எதிர்க்காத
எலிகளை
எப்போதும் பகையாகக் கொள்வதேன் பூனைகள்
என்ற கேள்வி யெழுந்தது
திடீரென ஒரு நாள் ஒரு எலியிடம்

அந்தக் கேள்வி இன்னும்
கேள்வியாகவே இருக்கிறது
பூனைகளுக்கும் எலிகளுக்குமிடையில்

5
எங்கள் வீட்டில் பூனைகளுமுண்டு
எலிகளுமுண்டு

எலிகளைப் பூனைகளுக்குப்பிடிக்காதிருக்கலாம்
பூனைகள் எலிகளுக்குப் பகைமையாக இருக்கலாம்
ஆனால்
எலிகளும் பூனைகளும்
அது அது அதனதன் பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனைக்கு சோறு வைக்கிறேன்
எலிகளுக்கோ எதுவும் கொடுப்பதில்லை
அதனாலவை
தாமே எடுத்துக் கொள்கின்றனவா வேண்டியதை எல்லாம்?

தாமே எடுத்துக் கொள்வதால்
எதையும் எடுக்கலாம்
எப்படியும் கொள்ளலாம் என்பதால்
சகிக்க முடியவில்லை
எலிகளின் வன்முறையை

எலிகளும் பூனைகளைப்போல்
நட்பாயிருந்தால்
எதையாவது கொடுத்துத் தீர்க்கலாம்

ஆனாலவை எப்போதும்
அச்சத்தில்
மிரண்டோடுகின்றன

அவற்றின் கண்களில் படபடக்கிறது
குற்றவுணர்வும்
அது பெருக்கும் அச்சமும்

எலிகளுக்குப் பூனைகள் மட்டுமா பகை?

எங்கள் வீட்டில்
எலிகளுமுண்டு
பூனைகளுமுண்டு
நாங்களுமுண்டு

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயக்குழல்

அம்மா என்றான் கண்ணன்
கண்ணா என்றா அம்மா

எல்லையற்ற கருணைப் பெருங்கடல்
பொங்கிச்சுரந்தது
வயற்கரை மேய்ச்சலில்
நின்ற பசுக்களின் மடியில்
இக்குரல்கள் கேட்டு

பொங்கிப் பெருகும் கருணை மேலிட
கண்ணா என்றாள் அம்மா

கண்ணன் கடவுளா குழந்தையா
என்றறியாத் தத்தளிப்பு
பிறந்தது அக்குரலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளறியவில்லை எதையும்
தன்னை ஆட்கொண்ட
கண்ணனைத் தவிர

அம்மா என்ற கண்ணன்
அறிந்தான்
தாயன்பின் கருணைப் பொழிவையும்
தன் நிழலில் துயிலும்
தாயன்பையும்

அம்மா என்ற கண்ணன் குரல்
இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கிறது
கண்ணா என்ற அம்மாவின்
அழைப்பொலியோடு

அம்மா என்றான் கண்ணன்
கண்ணா என்றாள் அம்மா

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிநேகம்

பள்ளி நாட்களில்
எப்படியோ அறிமுகமாகிவிட்டது
குரங்குளோடான நட்பு
குரங்குகளுக்கும் பள்ளிப்பிள்ளைகளோடுதான்
சிநேகம்

ஆனால் ஒன்று
எல்லாக் குரங்குகளும் ஒரே மாதிரியானவையில்லை
என்றபோதும்
எந்தக்குரங்குடனும் நம் சிநேகம் என்று தெரிவதேயில்லை
பலவேளை

வீட்டுக்கூரையில்
மாமரத்தில்
தெருக்கரைப்புளியமரத்தில்
மதிலில்
காரின் மேல்
தோட்டத்தில்
என்று எங்கு புழங்கினாலும்
எந்த மனிதரும் குரங்கை அழைத்ததில்லை
ஒரு விருந்தாளியாக

எங்கேதான் குரங்கைக் கண்டாலும்
கல்லெறியாத எந்தச் சிறுவனும் இல்லை
சிறுவர்களோடு விளையாடாத குரங்குகளும்
எந்தத் தெருவிலும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநுனிக் கொப்புகளில்
தாவித் தொங்கும் குரங்குகளிடம்
மலைதிரண்ட பலமா
இல்லைக் குரங்கேறும்போது அக்கொப்புகளில்
துளிர்க்கும் வீரியமா
எதிலுண்டு அப்பெரும் சாகஸம்;
மரங்களிலா குரங்குகளிலா?

எவ்வளவுதான் ஊரிலும்
நகரத்திலும் இருந்தாலும்
குரங்குகளை காட்டுப்பிராணியென்றே சொல்கிறார்கள்.
நகரத்துப்பழக்கங்களில்
குரங்குகளுக்கு ஈடுபாடிருந்தாலும்
அவை காட்டின் வாசனையோடேயே இருக்கின்றன

என்னால் ஒருபோதும் குரங்குகளை மறக்க முடியவில்லை
காட்டில் பயின்ற வித்தைகளை
அவை ஒருபோதும்
விட்டதில்லை யாருக்காகவும் எதற்காகவும்
எப்போதும் எங்கும்
இந்த நகரத்திலும்

அதனால் அவற்றை பிடித்திருக்குமா
இல்லை
எங்கோவோர் புள்ளியில் இன்னும்
அறுபடாமல் தொடரும்
தொப்புள் கொடியுறவின் நிமித்தமா இந்த ஈர்ப்பு?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேஸ்வரம்

பாடல்பெற்ற திருத்தலத்தின் திசைமுகங்களில்
போரிசை முழக்கம்
உடுக்கொலி மறைத்து
சங்கொலி மறைத்து
எழும் நாதப் பேரிசை மறைத்து.

மலைகளை அதிரவைக்கும் விதமாய்
'தென்னாடுடைய சிவனே போற்றி'
என்றவரெல்லாம்
அடிவீட்டில் முடங்கினார்
வழிதோறும் மலைமுழுதும்
படைவீட்டின் பெருக்கம் கண்டு.

இராவணன் வெட்டில்
கடல் குமுறித்துடித்தது
நூற்றாண்டாய், அதற்கும் அப்பால்
ஆயிரமாண்டுகளின்
தேவாரப்பண்ணிசையை
அலைகள் பாடின ரகசியமாய்
'நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பு...'

பீரங்கிகளோடு அலைகளை மேவி அலைந்தன
போர்ப்படகுகள்
துறைமுகத்தில்.
எண்ணெய்க்குதங்கள் இந்தியாவுக்கு
சில பங்குகள் சீனாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிமா ஆலை சிங்கப்பூருக்கு
சிமெந்து ஆலை யப்பானுக்கு
துறைமுகமோ அமெரிக்காவுக்கு.

சிவனுக்கோ
அடியாருமில்லை
அடிவைக்க இடமுமில்லை.

மலை முகட்டில் புத்தரின் சொருபம்
நிஷ்டையில்.

தியானம் வசதியாகிப் போய் விட்டது
அவருக்கு
அடையாள அட்டை இல்லாதபோது
கண்மூடி அமர்ந்து விடலாம்
சற்றுப்பாதுகாப்பு.

மலையில் சிவன்
சுற்றிவரப்படையாட்கள்
எங்கே போவது?
துவாரபாலகர்களையும் காணவில்லை
அவர்களைப் பிடித்துச் சென்றது யார்
யாரிடம் முறையிடுவது?

பதற்றத்துடன் உமையொருபாகன்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிஞ்சும் உயிர்

நெகிழ்ந்து கரையட்டும்
இந்த உடல்
கனமும் வலியும் நிரம்பி
எல்லோரையும் உறுத்தும் படியாய்
இன்னுமிருக்க வேண்டாம்

மாத்திரைகளை தின்னத் தொடங்கும்போதே
மரணத்தின் சாயல் முகத்தில் விழுகிறது
தொங்கும் கயிற்றின் நிழலாய் என்றேன்.

இல்லையில்லை
மரணத்தை விரட்டும்
சவுக்கோடு காத்திருக்கின்றன அவை,
அச்சமில்லை' என்றார் அன்றிரவும் மருத்துவர்
சிரித்தவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் நினைவில் எழுந்தாடும்
கத்திகள்
உயிரைக் கொண்டேகவா
அல்லது ஒரு சிமிழில்
அதை மீண்டும் பக்குவமாக்கவா என்று புரியவில்லை
சத்திர சிகிச்சைக் கூடத்தின் சுவர்களிலும்
சுழலும் மின் விசிறியிலும்
கனவிலுந்தான்

ஒரு மிடறு தண்ணீர்
சாவதற்கு முன்னும்
பின்னும்

இடையில் என்ன நடந்தது
யாருக்கும் நினைவில்லை.

மிஞ்சிக்கிடக்கின்றன மாத்திரைகள்
எதுவும் செய்ய முடியாமல்
பிரிந்த உயிரின் உடலோடு

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகம் -1

எத்தனை முகங்களை
நிதமும் பார்த்தேன் என்று யாருக்கும் கணக்கிருக்குமா
என்று தெரியவில்லை
பார்த்த முகங்களெல்லாம்
நினைவிலிருக்கும் என்றும் சொல்வதற்கில்லை
இத்தனை முகங்களையும் பார்த்திருப்போம் என்றும்
நினைத்ததில்லை.
ஒரு முகத்தை எத்தனை தரம்தான் பார்த்தோம் என்றும்
நினைவில்லை
பார்க்காத முகங்கள் எத்தனை என்றும் தெரியவில்லை
பார்த்த முகங்களில் எத்தனை விதமென்றும்
பார்க்காத முகங்களில் எத்தனை வகையென்றும் கூட

பார்த்த முகங்களிலும்
பார்க்காத முகங்களிலும் என்ன இருக்கிறது
என்ன இல்லை என்றும் புரியவில்லை முழுதாய்
தெரிந்த கணக்குகள்
எப்போதும் சறுக்க முனைகின்றன
முகங்களின் வளவளப்பிலும்
அவற்றின் பள்ளத்தாக்குகளிலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்காத முகங்களையெல்லாம் பார்ப்போம் என்பதற்குமில்லை
எந்த நிச்சயமும்

பார்த்த முகங்களையும் எத்தனை தடவைதான்
பார்ப்போம் என்றும் சொல்வதற்கில்லை

தெரிந்த முகங்களிலும் தெரிவதில்லை
எந்த முகத்தில் என்ன
இருந்ததென்று சிலபோது

இன்னுமொன்று
எந்த முகத்தை இறுதியாகப்
பார்ப்போமென்று யாருக்காவது தெரியுமா
அதுவும் எப்போதென்று?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகம் -2

அம்மாவின் முகம்
தங்கையின் முகம்
காதலனின் முகம்
நண்பரின் முகம்
தோழியின் முகம்
தாத்தாவின் முகம்
கள்வனின் முகம்
கொலையாளியின் முகம்
கொல்லப்பட்டவனின் முகம்
குழந்தையின் முகம்
மந்திரவாதியின் முகம்
படை அதிகாரியின் முகம்
பிச்சைக்காரனின் முகம்
துக்கம் நிரம்பிய கவிஞனின் முகம்
நடிகனின் முகம்
இறந்தவரின் முகம்
கடனாளியின் முகம்
நோயாளியின் முகம்
காற்றின் முகம்
பூவின் முகம்
வானத்தின் முகம்
கடலின் முகம்
கடவுளின் முகம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கேனும் கண்டாயா என்னுடைய
காணாமற்போன முகத்தையும்
ஒப்பனை முகத்தையும்
நான் மறைத்து வைத்த முகத்தையும்
நீ கண்டெடுத்த முகத்தையும்?

எந்தச் சந்தேகங்களாலும்
கண்டடைய முடியாத உண்மையால்
நிரப்ப முடியாது அன்பை

நமது பாதைகள் கற்பிதங்களால்
வரையப்படாதிருக்கட்டும் இனியும்

இல்லையினிப் பயணங்களிடையே
நிகழும்
சந்திப்புகளும் விலகல்களும்

யன்னலோர இருக்கை
யாருக்கென்பதில் என்ன
காற்றுவரும் வழியும்
காட்சி தெரியும் நிலையும்
எங்கு மிருக்கு மென்றால்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தரங்கம்

இந்தப்பறவை எங்கு இறங்கக் கூடும்
தீர்மானங்களேதுமிருக்குமா அதற்கு
எந்தக்கணத்தில்
இங்கிருந்து
இனி
எங்கு செல்லக்கூடும் அது

சிறகுகளில் விரிகிறது பயணம்
சிறகுகளில் இருக்கிறது
அதன் கனவு
அதன் நம்பிக்கை
அதன் வாழ்வு

பறத்தலின் சுவாரஷ்யம்
பறவைக்கிருக்குமா
இல்லை மிகுந்திருக்குமா
பறந்தே தீரவேணுமென்ற சலிப்பு

பறத்தலற்றிருக்கும்
பறவையின் கணங்களை
அறியத்துடிக்கும் இந்த மனசை
அறியுமா அது

இந்தப் பறவை என்று இறங்கக் கூடும்
என் தோளில்?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு

துளிர்க்கும்போதே தெரிகின்றது
இலைகளில்
இலையுதிர் கால முதுமையின்
படர்கை

உதிரும்போது ஞாபகம் கொள்கிறது
இலைகளின்
துளிர்முகத் துடிப்பும்
ஈரக்குளுமையும்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திரம்

சகிக்க முடியவில்லை என்னால்
மரங்களிலிருந்தும்
இலைகள் உதிர்வதை
மலர்களின் நிறம் வெளிறிப்போவதை
புல்வெளி மீது
தீக் கொழுந்து படர்வதை
பூஞ்சிறகினுள்ளிருந்து
இரத்தம் துளிர்ப்பதை

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்
பிச்சைக்காரனின் பாத்திரம்
கண்ணீரால் நிரம்புவதை

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது?

பிரமாண்டமாய் விரிந்திருக்கும்
வெளியில்
உறைந்திருக்கிறது
மௌனம்
நிலத்தடியில் பாய்ந்து கொண்டிருக்கும்
நதியின் ஓசையை உற்றுக் கேட்டபடி

பிரமாண்டமாய் விரிந்திருக்கும்
மௌனத்தில்
விரிந்து கொண்டும் கரைந்து கொண்டுமிருக்கிறது
வெளி

வெளியைக் கடந்தும்
மௌனத்தினுள்ளோடியும்
இருப்பதென்ன?
பேரிசையா
ஒளியா
இருளா
யாதுமற்ற ஒரு வெற்றிடத்தின் ரகசியமா?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு

இப்பெரும் பூமியில்
இல்லைத்துயரிற்றிருக்க ஓரிடமும்'
என்றபோது சொன்னான்
'இல்லை, எனக்கும்
ஒரு குழி நிலம் சொந்தமாக'
என்று,
என்னருகில் இருந்து
எதுவுமே அற்றவனாய்

எல்லைக்கற்கள்,
வேலிகள்
காணி உறுதிகள்
மதில்கள்
எல்லாவற்றுக்கும் அப்பால்
இருவரும் நின்றோம்
எப்போதும் பெரு வெளியில்

சிறியவீடுகள்
பெரியவீடுகள்
தொடர்மாடிகள்
அடுக்கு மாடிகள்
பழைய வீடுகள்
புதிய வீடுகள்
எதிலுமில்லை ஓரறையும்
இருவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலத்தில் நீ' யென்றான்
ஒரு நாள்
சிரித்தவாறு

ஒரு மரம் வீடானது அப்போது

அது
யாரோ ஒருத்தர்

யாராயிருத்தல் கூடும்?

ஒலித்தது பெண்குரலா ஆண்குரலா
எங்கிருந்து?

நினைவில்லை.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டு

நடந்து தொலைக்க முடியாத
இப்பெரும் பூமியில்
போக முடியவில்லை எங்கும்.

போவதற்கு இருந்தன
ஏராளம் இடங்கள்
போக முடியாத படிக்கு

அழைப்பும் அழைப்பின்மையும்
எப்போதும் குழம்பிக் கொண்டேயிருந்தன
பிரியத்தையும் கசப்பையும்
கலந்தபடி

வாசலில் தொங்கும் பூட்டு உறுத்துகிறது
யார் மீது நம்பிக்கை கொள்வதென
எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும்
அதன் அடையாளத்தை மீறி
செல்ல முடியவில்லை
எந்த வீட்டிலும்
தாராளமாக.

என்னையில்லா விட்டாலும்
யாரையோ அது சந்தேகிக்கிறது
கவனமான
ஒரு அவதானியாயும்
பிடிவாதக்காரக் காவற்காரனாயும்
எப்போதும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் வீடு

இருள் நிரம்பிய வீடுகளில்
துயரத்தின் நிழல்
அலைந்து கொண்டிருக்கிறது
தனிமையில்

காத்துக் கொண்டேயிருக்கும்
நாற்காலியில்
கைவிட்டுப்போன பொம்மை
காத்திருக்கிறது குழந்தையின் ஞாபகங்களுடன்
விளையாடிய கணங்களோடு

கொண்டு செல்ல முடியவில்லை
என்னோடிருந்த எந்தக்காலையையும்
எடுத்து வர முடியாத
மலர்களின் அழைப்புக்குரல்
இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கிறது
தொடுவானப்புள்ளிக்குமப்பால்
மறைந்து கொண்டிருக்கும்
வீட்டிலிருந்து

வழி நெடுகத் தொடர்ந்து கொண்டிருந்த
அழுகையின் குரைப்பொலி
விரட்டிக் கொண்டேயிருந்தது
எங்கும்
தொடர்ந்து

இந்த மரத்தின் கீழே
வந்த நேரம் தகிக்கிறது நிழலும்
கண்ணீரில் தீ மூண்டு

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழி

வீட்டிலிருக்கும் போதே வெளியேறிச் செல்கிறேன்
வெளியிலிருக்கும்போதே
வீட்டிற்குள் நுழைகிறேன்.

சிலபோது
வரவேற்பறையைக்கடக்க முடியவில்லை.
உள்ளே நுழையும்போதும்
வெளியேறிச் செல்லும்போதும்
யாருடையவோ நினைவுகள்
கடக்கமுடியாதபடி
கனத்த திரையாக தடித்துக்கிடக்கின்றன.

எங்கும் கொண்டு போக முடியவில்லை
அன்பின் வாசனை நிரம்பிய சிறுசிமிழையும்
மிஞ்சியிருந்த அவளுடைய சொற்களையும்
பிரியத்தையும்

வைத்திருக்கவும் இயலாது
இன்னும்
அவற்றின் கமழும் வாசனையை தடுத்துக் கொண்டும்
சுடரும் ஒளியை மறைத்துக்கொண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் விட்டுவிட்டேன்
அவற்றின் திசைகளில் அவை
திசையறிந்து பறக்கட்டும் பறவைகளாய் என்று.
இப்போ
தனிமையின் பிராந்தியத்துள்
கண்ணயரும்
நினைவுக்குலையில்
எதுவும் பருகுவதற்கில்லையா என்றாள்
எதிர்பாராத விதமாக இந்த மாலையில் வந்து
என்னெதிரில் நின்று வீம்பாக.

கடந்த காலங்களை இழுத்து வரும்
சிரிப்பொலியில்
அவளிருந்தாள் வீடு நிரம்ப அப்போது.

அப்போதும் இப்போதும்
நான் வீட்டிலிருந்தேனா வெளியிலிருந்தேனா
சொல்லடி என் தோழி!

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்காலத்தின் திசைமுகம்

இந்தக் கோடுகளைக் கீறியபோது
நான் வெளியிலிருந்தேன்
அதுவே நல்லது

காய மறுத்த இரத்தத்தினடியில்
சிரித்துக் கொண்டிருக்கும் முகத்தை
என்னாற் பார்க்க முடியவில்லை
யாரால்தான் முடியும்
கொலைகளின் மீது
பூக்களின் அலங்கரிப்பை ரசிப்பதற்கும்
அதற்காக வாழ்த்துப்பா இசைப்பதற்கும்?

தும்பைச் செடிகளை விலக்கி
நடந்தபோது
என்னோடு கூட வந்த நிழலைக்காணவில்லை
யாருடனோ சென்ற அது
வழி தவறி
உடைந்த பாலத்தின் முனையில்
தேம்பியவாறு நின்றது

காற்றிலாடிய பனைகளுக்கிடையில்
சுருங்கி விரியும் வெளியினூடு
உறைந்திருந்த பேச்சுக்குரல்களை விலக்கி
சந்தைக்குப்போகும் பெண்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் நிரம்பிய ரகசியங்களும் கதைகளுமிருந்தன
எங்கும் விற்கமுடியாமலும்
தங்களுடன் வைத்துக் கொள்ள முடியாமலும்.

எல்லோருடைய கண்களிலும்
முடியாமைகளின் ஊற்று
பெரும் சதுப்பு நிலப்பரப்பை
உருவாக்கிக் கொண்டிருந்தது
அவர்களையே சுற்றி
ஒரு வியூகமாய்

எதிர் மறைகளுக்கிடையில்
முளைத்திருந்த
ஒற்றை விழியை
யாருந் தீண்ட மறுத்தபோதும்
எல்லோரும் மறந்த போதும்
நானெடுத்துக் கொண்டேன்
மூன்றாவது கண்ணாய்
அதுவே முதற்கண்ணென்றும்

நெற்றிக்கண் திறப்பினும்'
என்றவரெல்லாம் காணவில்லை
ஒளி மலர் விழியை
அதன் உள்ளும் புறமும்
தகிக்கும்
முக்காலத்தின் திசை முகங்களை

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மியூசியத்தில் வைக்கப்படும் நாள்

இந்தக்களைப்பு நீங்க
தண்ணீரைக்குடி
கைவிடப்பட்ட இந்த நாள்
இனி ஒரு போதுமே கிடைக்கப் போவதில்லை
இன்று
துக்கத்தின் கடைசிப்புள்ளியிலிருந்து
திரும்பி
அவரவர் இடத்துக்குச் செல்வோம்.

மெல்ல மெல்ல
வேதனையின் வலி பின்னகர
இறந்தவனின் உயிர்
நம்மை விட்டு நெடுந்தொலைவு போன திசையில்
போகிறது
அவனின் நினைவுகளும்
கரைந்து
கனமற்று.

மெதுவாகவே
பதுங்கி நகர்ந்து வருகின்றன
துக்கத்தின் போது மிரண்டு பின்தங்கிய
வார்த்தைப் பூனைகள்
நம் கால்களுக்கிடையில்
மீண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிந்து போன பருவகாலமாகிவிட்ட
அவன்
இனி ஒளி மங்கியதொரு புகைப்படமே

வெட்கமாகவேயிருக்கிறது
இந்த நாடகத்தில்
நாமே
நடிப்பதாகவும் நாமே
அதைப்பார்ப்பதாகவும் இருப்பதையிட்டு

தற்செயலாய்
இறந்தவனைக் காணநேர்ந்தால்
உலர்ந்த நினைவுகளை வைத்துக்கொண்டு
என்ன செய்வது
எந்தப்புள்ளியிலிருந்து அவனைத்
தொடர்வது
என்பதும் ஒரு பிரச்சினையே

எல்லாமே மியூசித்திற்குத்தான்
ஒரு போது எனலாமா?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டன்

இந்தக்கதவுக்கு வெளியே
நிறுத்தப்பட்டிருக்கிறது நெடுநேரமாய்
வரவேற்பு
யாருடையதோ வருகைக்காக

பூட்டப்பட்ட கதவின் வெளியே
நெடுநேரமாய் தனித்திருக்கும் போது
அவமானத்தையும்
நெருடலையும்
சகித்துக் கொள்ள முடியாது
வெளியேறவும்
உள்நுளையவும்
வழியற்று
சலிப்போடு காத்திருக்கிறது
அது
இன்னும் யாருக்காகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமா
மகிழ்ச்சியா
துக்கமா
தனிமையா எது வருமெனத்
தெரியாமலே காத்திருக்கும்
அசைகின்ற நீள் பொழுது

எந்த முகமும்
இல்லை அதனிடம்

எனினும்
இன்னும் காத்துக் கொண்டேயிருக்கிறது
பூட்டப்பட்ட கதவை விட்டுப் போக முடியாமல்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்டை

உறங்கும் தீயின்
நடனத்தைக் கண்டேன்
கருணையும் அன்பும்
மன்னிப்பும்
பகிர முடியாமற் கிடந்த
மேசைமீதில்
உலர்ந்த காகிதத்தினுள்ளிருந்த
இந்தப் பேரமைதியில்

கத்திகளைக் கொண்டுள்ளன
உன்னுள்ளுறங்கும் சொற்கள்
கூராகவும்
துருவாகவும்

வெண் சித்திரத்தைத்
தீட்டும் ஓவியர்களிடம்
எப்படித்தான் மறைப்பது
நடனமிடும் தீயையும்
உறங்கும் கத்தியையும்

பழங்களோடிருக்கும் தட்டில்
வைக்கப்பட்டிருக்கும் கத்தி
கொலைகளை
குருதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிக்கூடாரங்களின்
முனகல்களை
நிராதரவான விழிகள் தெறித்த
சிறுவர்களைக் கொண்டு வந்து
நிரப்புகிறது
பழங்களில்

எல்லாப் பாசாங்கிலும்
கரைந்த பேரமைதி
திடீரெனத் தஞ்சமடைந்தது
தீயிடமும் கத்தியிடமும்
வெருண்டு

தீப்பிடித்த மரங்களில்
எரிந்து கொண்டிருந்தன நிழலின் பாடல்களும்
மலர்களின் குதூகலமும்
பறவைகளின் கனவும்
கனிகளின் ருஷியும்

குருதி மணக்கும் வார்த்தையில்
குவிந்து கொண்டேயிருக்கிறது
கடல் மணலாகி

எங்கேயிருக்கிறது கரை?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசையழிவு

உடைந்து நொருங்கிய
மலர்களிலிருந்து சிதறிய குருதியில்
இருண்ட திவ் வெளி.
தவித்தன நிறங்களும்
வாசனையும்.

பெயர முடியா திருகிய
நிலவில்
உறைந்தது இரவு.

வெளியிலிருந்தும்
மரங்களிலிருந்தும் விலகிய
பறவை
கனலோடலைந்தது
கூடு தேடி
மரங்களும் வெளியுமற்ற
திசையில்.

அந்தரத்தில் மிதக்கும் கிளை
விலகிச் செல்கையில்
குருவியின் இதயம் படபடத்தது
வானத்தைத்திறந்து மூடி.

காலம் உருகி உறைந்தது
ஒரு கிண்ணத்தில்.
அதன் சுவையாகத் திரண்டது
பறவையின் கனவும்
கூடும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லாத சொற்களோடு

எங்கும் செல்லாத சொற்களோடு
தெருவில் நீ போனபோது
இரவில்
தூங்கமுடியாது நீ தவித்தபோது
உன் தொண்டைக்குழியில்
உயிர் முடிச்சிறுகியபோது
வலையில் சிக்கிய பூச்சி நீ.

வலையோ
எல்லாக்கண்ணிகளாலும் தொடுக்கப்பட்ட
உலகம்
உனக்கெனவும் எனக்கெனவும்.

ஒவ்வொரு கண்ணியிலும் விரிந்த சிறை
வலையில் ஒடுங்கியது
உன் கானற் சொற்களின்
கொதிப்போடு.

எனதும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் கேட்கவில்லை
உனது முறையீட்டை

பூட்டுகள் பூட்டுகள் பூட்டுகள்

எல்லாப்பூட்டுகளோடும்
இணைந்திருந்த வலைகள்
பிரித்தறியத் தெரிந்திருந்தன
நுட்பமாய்
உனது சொற்களை வேறாகவும்
உன்னை வேறாகவும்.

அவை தெரிந்திருந்தன
இன்னும்
உனது சொற்களைத்தவிர்த்து
உன்னைத் தேரவும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழியில் ஒரு நாற்காலி

வழியில் ஒரு நாற்காலி
தனித்திருந்தது

விட்டுச் சென்றோருக்காகவா
வருவோருக்காகவா?

மிஞ்சிய அதன் நினைவுகளில்
விடை பெற்றது யார்
இனி
வரும் விருந்தாளி யார்?

யாருடைய நிழலும்
அதனிடமில்லை

பல்லாயிரம் வேர்களோடும்
பற்கள் கொம்புகளோடும்
வளர்ந்து மலையாகலாம் அது

சிலபோது
சிறகோடு
காற்றிலேறி வினோதப் பறவையாய்க் கரையலாம்

எப்படியோ
வழியில் ஒரு நாற்காலி
தனித்திருக்கிறது.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லா மனிதர் பற்றிய குறிப்பு

பார்த்த மனிதர்களைப்பற்றி
எந்த மனிதரிடமுமில்லை
எல்லா மனிதர் பற்றிய குறிப்பும்.

எல்லா மனிதரிடமும் இல்லை
எல்லா மனிதர் பற்றிய
எல்லாமும்.

அவரவர் வயிறும்
அவரவர் உலகமும்
தனித்தனி யென்றான்
என்றோ சந்தித்த யாரோ ஒருத்தன்.

தனித்தனியாகவே யிருக்கிறது
எல்லோர்க்கும் வயிறு
அவரவர்க்கான உலகமாய்
அவரவர்க்கான
இன்னும் எதுவுமோவாய்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளையம்

அப்படியே இருக்கட்டும்
இந்த வெளியும் குறுகலும்

யாரும் வரவில்லை
இந்த அகாலத்திலும்

பனைகளின் இடையே
நெளியும் ஒழுங்கையில்
இன்னும் மணந்து கொண்டேயிருக்கிறது
தினவடங்காக் கலவரமும்
நிகழ்ந்து கொண்டிருக்கும்
சாவும்

வெளியேறிச் சென்றவர்கள்
திரும்ப முடியாத இடத்தில்
தரித்திருக்கக் கண்டேன்.
விட்டுச் சென்ற வார்த்தைகள்
திரும்பி வர விடவில்லை ஒருபோதும்
யாரையும்.

அந்த வார்த்தைகளில்
வளர்ந்த
கடக்க முடியாத பெரும் சுவர்களில்
படர்ந்திருந்தன
நாம் வளர்த்த முட்செடிகள்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருவத்தில் சுவடெறிதல்

பழகிய வாசனையை
கடந்து செல்லும் போது
இந்த அதிகாலையில்
நீர் தளும்பிய துன் கண்களில்.

மரணத்தைக்கடந்த ஒரு விபத்தில்
தேறியபிறகு
இன்னொரு விபத்தில்
மரணத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்தேன்
மீண்டும்.

இத்தனை அருகாமையிலா
இருந்தாய்
இத்தனை நாளாய்
எல்லாக்கதவுகளையும் பூட்டிக் கொண்டு
விழித்தபடி
வலி பெருகி நிலம் நிறைய?

இன்று
கதவுகள் திறந்தபோது
கடந்து சென்றிருந்தேன்
இன்னொரு துருவ வெளிக்கு

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கியின் தியானத்தில்

மாபெரும் துப்பாக்கியொன்று நடந்து வந்தது
வீதியில்
தொலைவில் வரும்போதே
அதன் இருளடர்ந்த கண்களைக்கண்டேன்
தினவடங்காத அதன் வாயிலிருந்து
வழிந்த புன்னகையில்
காட்டு விலங்குகளின் பெருங்கூட்டம் அலைந்து கொண்டிருந்தது

பனைகளைவிடவும் உயரமாக
தெருக்கரை ஆலமரத்தை விடவும் பெரியதாய்
நடந்து வந்த துப்பாக்கி
எல்லா வீதிகளிலும் திரிந்தது.
என்ன அதிசயமென்றால்
துப்பாக்கி நடந்து சென்ற வழியெல்லாம்
மிஞ்சியிருந்த அதன் சுவடுகளோடு
அதன் நிழலும் அழியாமல் மிஞ்சியிருந்தது
அதுவும் தடித்த பெரும் பாறையாய்
அது உறைந்திருந்தது
அது திரிந்த இடமெல்லாம் நீண்டு.

நடந்து வந்த துப்பாக்கி
எல்லா வீடுகளிலும் நுழைந்து
எல்லா அறைகளிலும் சாதாரணமாகவே நடந்தது
குசினிக்குள் வந்த அது
ஒவ்வொரு பாத்திரங்களிலும் புகுந்து வெளியேறியது
கழிப்பறையைக்கூட அது மிஞ்சவிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் இளைப்பாறுவதற்காக
அது படுக்கையில்
உன்னருகில் படுத்துக்கொண்டது
அப்போது உன்னுடைய
மூச்சின் வாடையில் உயிரின் சுவையை அறிந்தது

மேலும்
படுக்கையில் படிந்திருந்த
கனவுகளைக்கண்ட துப்பாக்கி
அதை எடுத்து முகர்ந்து பார்த்தது
பிறகு முகத்தைச் சுழித்துக் கொண்டு
அப்படியே அவற்றைக்கீழே வீசியெறிந்தது.

விழுந்த கனவுகள்
சிதறிப் பெருகின ஆயிரமாயிரம் கண்கொண்ட முத்துகளாக
சலங்கையொலிக்க
குருதி தெறிக்க.

படுக்கையிலிருந்து எழுந்த துப்பாக்கி
மீண்டும் நடக்கத் தொடங்கியது
கோயில், மைதானம், பள்ளி, தேவாலயம்,
சந்தை, பூங்கா, கடற்கரை, ஆற்றோரம், வயல்வெளி
நகரத்தின் இடுக்குகள் கால்வாய்கள் எங்கும்
உலாத்திக் கொண்டு.

ஆனாலும் பொழுது போகவில்லை
அதைவிடவும்
படுக்கையில் அது முகர்ந்த கனவின் மணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அதற்குக் குமட்டிக் கொண்டேயிருந்தது
அதைவிடவும் கொடுமையானது
அந்தக்கனவுகளில் மின்னிக்கொண்டிருந்த
சின்னச்சிறகுகளையும் முத்துக்கண்களையும்
மறக்கவே முடியவில்லை அதனால்

எரிச்சலோடு
துப்பாக்கி நடந்து வரும்போது
அநேகமான ஆட்கள்
ஒழிந்து கொண்டார்கள் இண்டு இடுக்குகளில் எல்லாம்.
ஒழிந்து கொள்ள இடம் கிடைக்காதவர்கள்
தங்கள் தலைகளை
தங்கள் மடிக்குள்ளேயே மறைக்க முயன்றார்கள்.
அதுவும் முடியாதபோது
தங்கள் மலவாசலுக்குள்ளேயே அவற்றைப் புதைத்தார்கள்.

உயிருக்கு முன்னே
எதுதானென்ன என!
அவமானமும் வேதனையும் தொனிக்க யாரோ துக்கத்தோடு
சொன்னார்கள்

எதுவும் செய்ய முடியாதபோது சிலர்
அதனைப் பணிந்தார்கள்
என்ன ஆச்சரியம்
அப்போது அது தலையை அசைத்தது:
சிரித்தது:
ஆசீர்வாதமும் வழங்கியது.

நீங்கள் நம்பமுடியாதபடி அதற்கு் முன்னால்
மலர்ச்சரங்களின் குவியல்கள் வளர்ந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்தில்
தோத்திரங்கள் பாடப்பட்ட பெரிய கல்வெட்டையும்
துப்பாக்கிகளின் மகிமையையும்
புராணத்தையும் சொல்லும்
சித்திரங்களையும் கண்டேன்

சற்று நேரத்தின் பின்
கண்மூடித்தியானத்திலமர்ந்தது துப்பாக்கி
அப்போது
படுக்கையில் அது முகர்ந்த கனவின் மணம்
குமட்டிக் கொண்டுவந்தது அதற்கு
அதைவிடவும் கொடுமையானது
அந்தக்கனவுகளில் மின்னிக்கொண்டிருந்த
சின்னச்சிறகுகளையும் முத்துக்கண்களையும்
மறக்கவே முடியாமலிருந்தது அதனால்.

அந்தக்கனவுகளின் குழந்தைச்சிரிப்பையும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு

உடைபடும் குமிழியில்
விரியும் பேரரசு
தன்னை விரிக்கிறது
எல்லையற்று

ஒவ்வொரு தலைக்குள்ளும்
பெருகும் சாம்ராஜ்ஜியத் துகள்கள்
மூளையில் படிகிறது
தூசிப் பெரும்படலச் சாம்ராஜ்ஜியம்.

தூக்குக்கயிறுகள்
பலி பீடங்கள்
பரிசோதனைக் களங்கள்
மரணவெளிகள்
இன்னும் ஏராளம்
வகைமாதிரிகள்.

கண் கழன்று தெருவில்
விழுந்து நசிந்தது
விலகியோட முடியாத கூட்டினுள்
சிங்கம், புலி, நாய், நரி, மான்
முயல், புறா, கிளி, பருந்து இன்னும்
ஏராளம் கானுயிர் கொத்து
இரத்த வாடையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறித்தடுக்கப்பட்ட பனங்குற்றிகளினாலான
காப்பரணில்
குறிதேடும் துப்பாக்கியோடு
ஒரு சோடிக்கண்கள்
எக்கணமும் தத்தளித்தபடி...

பேரரசின் சாம்ராஜ்ஜியக்
காவற்கோபுரத்தில்
இல்லை எந்தத் தீர்க்க தரிசனமும்.
மெல்லத் தன்னுடலை விரிக்கும்
அடிவாரச்சரிவின்
மெல்லிய வெடிப்புக் கோட்டில்
பேரரசின் விதி
துகளாகி;

விரிந்த பேரமைதியில்
தறித்த பனையின் அடிக்குற்றியின் மீது
எந்தச் சலனமுமின்றி
இருக்கும் பறவை
கொண்டது வானத்தை, அரசென.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரலின் தனிமை

காலம் தன் திரையில்
படர விடுகிறது ஒரு விரலை
இறுதி மரியாதைக்காக

கண்டேன்
எந்த மரியாதையுமில்லாமலே
புதைக்கப்படுகிறது
துண்டிக்கப்பட்டு அநாதரவான அவ்விரல்
தனிமையில்
பொருட்டேதுமின்றி

மிஞ்சிய உடலில் இருந்த வருத்தம்
வலித்தது
விரலின் ஆற்ற முடியாப்பிரிவில்

விரலோ தனித்த விதியில்
உதிர்ந்த மலர்
சருகென மண்ணில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் விதி
தன் வலிமையை ஊன்றிய போதில்
துண்டிக்கப்பட்ட விரலுக்கான
இறுதி மரியாதையை எங்ஙனம் செய்தல் கூடும்?

துண்டிக்கப்பட்ட விரலின்
கொடுந்தனிமை
உடலின் துண்டுகள் ஒவ்வொன்றிலும்

அவ்வாறாயின்
எங்கிருக்கும் இறுதி மரியாதைக்கான
கடைசிப் பொருள்?

உடலின் எந்த மையத்துக்குண்டு
இறுதி அஞ்சலி?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணையில்லாத பிணம்

கருணையில்லாத பிணம்
எல்லோரையும்
கதறியழ வைக்கிறது
அன்பின்றி
சிறு நன்றியுமின்றி.

சாவின் களை நிரம்பிய முற்றத்தில்
துக்கம் பூத்து
படர்கிறது வாசமாய்
பேரிசை கொண்டெழுகிறாள்
ஒப்பாரிப் பெண்
மீளாதா உயிர்க்கால மென்று.

எந்தக்குரலுக்கும் பிரதிபலிப்பின்றி
கரையமுடியாதிருக்கிறது
மயான நினைவோடு
பிணம்.

முடிந்தது ஒரு பயணம்
விலகியது மந்தை
கூட்டத்தில் பெரும் பள்ளமாய்
துக்கத்தின் மறை பெருக்கி

மிஞ்சிய கனவில்
தீ மூழுமா
புல் முளைக்குமா?
வெற்றிடத்தில் அமர்கிறது காகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்ச் சோற்றுக்காய்
கரைந்து
பாடல் பாடியவாறு.

போய்ச்சேர்ந்த பிறவிக்காய்
இறுதி நேரப்பரிசை
அழாது கொடுக்க யார் வருவீர்?
இறுதி விடை பெற்றபின்னும்
துக்கத்தோடா
வழிவிடுவது?
ஒரு துளி சிரிப்பையொலிக்க
யாராலும் முடியவில்லை
தோற்றது போ
இவ்வுலகம்.

துடிக்கும் மரக்கிளையில்
காற்றை விலக்கி
அமரும் குருவிகள்.
யாதறிந்தன
இந்த மரணப்பொழுதைப்பற்றியும்
விடை பெற்ற பயணி குறித்தும்?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிச் சொல்ல முடியாது

மேற்குச் சூரியன் மறைகிறது
இருள் மணக்கும் வனத்தில்
உதிர்ந்த சிறகுகளின் குவியல்.
மாமிச நெடில் வீசும்
மரங்களில் எழுதிய பெயர்கள்
வேட்டைக்காரனை ஞாகப்படுத்துகின்றன.

கண்காணாத தேசத்து பரிவாரங்களின் பரிகாசத்தில்
செய்வதற் கெதுவுமின்றி
முழந்தாள்களில் தலையை வைத்து
மண்டியிட்டமுதாள் தேவி
பெருந்தேவி.

கொக்குகள் பறந்து திசை பெயர்ந்த
மாலையில்
வயற் கொட்டிலில்
புகை மெல்லக் கிழம்பி வர
மூள்கிறது நெருப்பு.

உடுக்கொலி நிரம்பும் வயல் வெளியில்
முன் பனிக் குளிர் வாட்ட
கொடுகிக்கிடக்கும் கிழவனின் காதுகளில்
தேள் கொட்டியது.

வடக்கே பெரும் பீரங்கி முழக்கம்

ஆயிரம் தலைகொண்ட நாகம்
படமெடுத்தாடும் சந்நதத்தை
காட்டின் நாயகி கண்டு துணுக்குற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லைப்புறத்தில்
மருத மரங்களில்
கூடிய பறவைகள் சிதறித் தெறிக்க
இருள் விழுங்கிய
தாமரைக் குளத்தில்
மருத மரங்கள் பாறி வீழ்ந்தன.

சனங்களின் குரலால்
நிறைந்த வானத்தில்
எந்த நட்சத்திரமுமில்லை
கண்ணறிய.

புயல் கொண்டு போகிறது
கையிலேந்திய
ஒரு சொட்டு நீரையும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுக்கரை

இன்றிரவு
பெயர்ந்து
ஒரு பகலிடம் போய்ச்சேர்ந்தபோது
நானிறங்கினேன்
அதிலிருந்து பதற்றத்தோடு.

நகரம்
நாயினால் நிரம்பியிருந்தது
ஒரேயொரு நாயினால்.

படைத்தளபதிகள்
பீரங்கிகளோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில்
இரகசியமாக
பனைகளின் மறைவில்
நகர்ந்து கொண்டிருந்த சூரியனுக்கு
ஒரு சிப்பாய் குறிவைத்தான்.

சிதறித் தெறித்தன பல்லாயிரம் பனைகள்.

நகரத்தில்
புழுக்களுக்கு வணக்கம் சொல்லி
வரவேற்றான் படைத்தளபதி
ஒரு விருந்துக்காக
துளிரும் இலைகளின் மேல்
புழுக்கள் கூடுகட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் கவனிக்கவில்லை
பீரங்கிகளிலிருந்து இரத்தம் வடிவதையும்
கண்ணீர் பெருகுவதையும்.

அப்போது
அலறியபடி வந்த சிப்பாய்
தளபதியின் காலடியில்
மண்டியிட்டமுதான்
அந்தப்பீரங்கிகளில் ஒன்றையேனும்
தந்ததால்
நீர் பெய்து தன்வம்சம் பெருக்கும்
திறன் பெறுவேனென்று.

கூடிய தளபதிகள்
சிப்பாயை
முறிந்த பனைகளின் கீழே
புழுக்களிடம் பரிசளித்தனர்
முற்றிய பகலில்
திணறிக் கொண்டிருந்தன
முந்தைய இரவும் வரத்தயங்கும் இரவும்.

என்னை எங்கும் காணவேயில்லை.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீரங்கியின் வாய்மொழி

அடங்க மறுக்கும் சிறு குரலை
மறைத்து வைத்திருந்தேன்
பதுங்கு குழியின் இடுக்கினுள்.
பீரங்கியிடம் அது சொல்லவிருந்த
சில வார்த்தைகளையும்
கேட்கவிருந்த சில கேள்விகளையும்
நான் களவாடினேன்
நிகழக்கூடிய அபாயம் கருதி.

ஐயா, ஒரு போதும் எதற்கும்
அடங்கியதில்லை
நெஞ்சறிந்த உண்மையை யன்றி.

நானோ
ஒரு பல்லியாகிச் சுவரில் ஒட்டினேன்

அது பகல்
தீரா விடாய் கொண்ட பகல்.
தேவாலயங்கள் இடிந்து வீழ்ந்த
அப்போதில்
இடிபாடுகளில் புறாக்களும்
பிரார்த்தனைகளும் சிக்கிய வேளை
பீரங்கிகளின் வாய் மொழியைக் கேட்டேன்
அருகில்
மிக அருகில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம சேனை
என்னை மிதித்துச் சென்றது
போதையுடன்.
பெருகிய குருதியில்
தாகம் தீர்த்த பகல்
கள்வனைப்போல் இரவிடம் பதுங்கியது.

இதோ சிதறிக்கிடக்கிறது
கோவில் மணியோசை
இறுதி நேரப்பிரார்த்தனையின்
கடைசிச் சொற்கள்.

இனித் தேவனைப்பாட
சொற்களிருக்குமா?
பிரார்த்தனைகளிருக்குமா?

ஆயிரமாயிரம் சுடர் கொண்ட விழிகளோடு
வானத்தை வெறித்தபடியிருக்கும்
சிறுமியின் அருகில்
பெயர்ந்து கொண்டிருந்தது
மிஞ்சிய நம்பிக்கையும்
அவள் சேகரித்து வைத்திருந்த எதிர்காலமும்.

பிளந்து கொண்டு போகிறது
பூமி
என்னிடமில்லை
அடங்க மறுத்துத் திணறிய அக்குரல்
இப்போது.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூடிய போதில் மாலை

ஒரு மாலை கொண்டு வா
பீரங்கியின் கழுத்தில் சூடலாம்
சாவின் தீரப்பசியுடைய
பெருந்தேவன் இதுவல்லவா.

இந்தப்பகலை
கொய்து
சுவரில் அறையுங்கள்
ஒரு பகலில் எதுதான் தோற்கும்
எதுதான் வெல்லும்
வாழ்வைத் தோற்கடித்த
மரணத்தின் முன்னே இரவென்ன பகலென்ன
சிலுவைக்கருகில் சாவின் பிணமும்
சேகரித்த சிரிப்பும்
தனிமையில்.

மரங்கள் பைத்தியமாகி
நடந்து திரிகையில்
இதோ வசந்தம்
கண்களிலிலிருந்தும் மரங்கள் பூக்களிலிருந்தும்
பெயர்க்கப்பட்டு வருகிறது.

மனதை விழுங்கி
வேண்டப்படாத மௌனத்தை
பரப்பி இருக்கும்
அந்தச் சனங்களிடம்
ஒரு வார்த்தை, ஒரேயொரு வார்த்தை
பெற்றுக் கொண்ட பிறகு
மெல்ல வாருங்கள் இந்தப் பீரங்கிக்கருகில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய தோலில்
முழங்கப்படும் பேரிசைக்காக
காத்திருக்கும் வேதனையுடைய காலையே
நடுங்கும் கரங்களோடு
அலைகிற காற்றுக்கருகிலே
மூர்ச்சையற்றுக் கிடக்கிறாள்
அவனுடைய தாய்
ஒரு தகர்ந்து போன பாலமாய்.

எங்கே பாண்காரன்
இலையான்களை விட்டுச் சென்றது
கருணையில்லாத பிணம்.

பசியின் கூடாரத்துள் வெற்றிக்கொடிகளை
களவாடிச் சென்ற
வெளியாட்களை தேடப்போனது யார்?

காட்டு வழியில் சூடிய மாலைகளோடு நின்ற
பீரங்கிகளில்
மோதி வீழ்ந்தவர் யார்?
சருகுகளில் வேர் கொண்டெழுகிறது
காடு
இந்த வேதனைகளில் பற்றியெரியும்
என்னுடலை தீயுடன் தருகிறேன்
யாராவது கொண்டு செல்லுங்கள், எங்காவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாட்களிடம்
பூக்களையும் பொம்மைகளையும்
கடந்த காலத்தையம் கொடுத்து
ஒரு படைவிருத்தியைச் செய்வோம் என்ற
வழிப்போக்கனை தேடுகிறேன் விருந்துக்காக
காலம் அவனிடம் பணிக.

நிகழ்காலத்தின் மீதும் எதிர்காலத்தின் மீதும்
ஓட்டை போடும்
நுட்பத்துக்காக
பரிசளித்துக் கொண்டிருக்க முடியுமா எப்போதும்
படைக் கென்றாள்
பாலகி.

யாருமில்லை இந்த வெளியிலும் இருட்டிலும்

தனித்தேயிருக்கிறது
வழி
ஒளியுமின்றி இருளுமின்றி
ஒரு சிதறிய கண்ணாய்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடுங் கோடை

தேனெடுக்கத் தவிக்கும் ஊரில்
கோடை விளைந்த வயலிடைக்கண்டேன்
பசியுமிழும் கண்களோடு
இரண்டு சிறுவர்களை

கன்னங்களில்
இருள்குவிந்த போதிலும்
நெருப்பாயிருந்த கண்களில்
தகித்தது
தீரா வெக்கை

பெருகிய கோடையை
மேயும் மாடுகள்

முலுட்டுப் பூவரசம் மரங்களில்
எல்லா மகிழ்ச்சியோடும்
எல்லாத் துக்கத்தோடும் புலுனிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றள்ளி வந்த கோடையின் குரலை
வாங்கியதா வெளி?
ஏந்தியதா பனை?
இரைச்சல்
கோடையின் பேயிரைச்சல்.

வெக்கையில் அனுங்கும்
வயல்வெளியில் பெருவிசமாய்
அனல்மேயும்.
அப்பொழுதில்
வடலிகளில் தாவும்
அணில்களும்
அந்தச் சிறுவர்களும்
வானத்தின் கீழே
பிரமாண்டமாயினர்
புலுனிச்சத்தத்தின் பின்னணியில்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமரைக்குளத்தில் இறந்த மனிதனும் பூத்த தாமரைகளும்

தாமப்பா குளிக்கப்போனபோதும்
தாமரைக்குளம்
பூத்திருந்தது
மருத மரநிழலில்
தண்ணீரும் படு குளிராக இருந்தது
பகல் முழுதும்
தாங்கொணாச் சூரியன்
நெருப்பையவிழ்த்தபோதும்
தாமரைக்குளத்தில்
தண்ணீர் குளிரே.

தாமப்பாவுக்கும்
தாமரைக்குளத்துக்கும்
கோடி சம்மந்தம்

எந்த ரகசியங்களையும்
தாமரைக்குளத்திடம்
மறைத்ததில்லை
அவர்
தன் காலத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்குளியல்
மாலை நீராடல்
கண்ணன் கோயில் தீர்த்தத்தில்
கரையெல்லாம் தாமரைகள்
பூக்களும் மொட்டுகளும்
தாமப்பாவோடு.

ஒரு பின்னேரம்
தாமப்பா மட்டும்
தாமரைக்குளத்தில்.

குளம் அவரைக் கொன்று விட்டதா?
தாமப்பா குளத்தில் மூழ்கி இறந்தாரா?
யாருக்கும் தெரியவில்லை.

பாற்கடலில் பள்ளி கொள்கிறார்
இன்னோர் அவதாரத்தில் விஷ்ணு.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெக்கை

அறுந்து தொங்கும் ஊஞ்சலில்
நீ ஆடுவதற்கில்லை
இனி.

அதிலாடுகின்றன இணைச்சிட்டுகள்
காதல் பெய்து

பாம்பின் கண்களில் வழியும் கருணையொளியில்
ஊஞ்சலை நோக்கி வளருகிறது
வேர்ச்செடி.

நிலத்தில்
கண்ணாடியின் முன்பாக
நிற்கும்போதறிந்த
நீயுமல்ல நானுமல்ல
இந்தப் பொழுதில் பிணக்குற்று நிற்பது.

அகாலம் வேர் கொண்டெழுமுன்
தரையூன்றிடு
காடுகள் எரிகின்றன
பறவைகளின் கூடுகளோடும்
நாம் உண்ணுவதற்கிருந்த கனிகளோடும்.

ஊர்ந்து கொண்டேயிருக்கும் எறும்பிடம்
நிலம் பற்றிய ரகசியங்கள்
ஏராளமிருக்கின்றன
அழுகொளிரும் வாசனையோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாயா அறிவாயா
வாசனையையும் ரகசியங்களையும்

எதையும் மோதிச் சரிப்பதில்லை என்றபோதும்
எறும்புகள் இன்னும் அழியவேயில்லை
மோதிச் சரிக்காத மரங்களை விலகி
பாறைகளையும் மணல்மேடுகளையும்
மலைகளையும்
ஏறிக்கடந்து போகின்றன
போகவும் வரவுமான பாதையில்.

மழைச்செடிகளில்
நிலம் தன்னை எழுதி
வானத்தின் கீழே
விரித்திருப்பதைக் கண்ணுற்ற
உன்னிடம் கேட்கிறேன்
காற்றிடம் எதையறிந்திருக்கிறாய்
எதைச்சொல்லியிருக்கிறாய்?

தரையின்
ஆழ்சூட்டை அறிந்த போது புலப்படவில்லையா
தாயின் கண்ணீரில்
உருகிய காலத்தையும்
நிலத்தையும்?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளி

பெருவெளியில் இல்லைப்
படரும் நிழல்

இல்லை
நிழல்

வானத்துக்கும்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் விளம்பரத்தட்டி

மிகப்பிரமாண்டமான விளம்பரத்தட்டிகள்
எல்லாம் ஒன்று கூடி
கேலிசெய்தன நகரத்திலிருந்த
அத்தனை பிச்சைக்காரரையும்
என்னையும்.

யாரையும் அழைத்துக் கொள்ளும்
அவற்றின் வண்ணவெளிகளில் இருக்கவில்லை
நமக்கான எந்தச் சிறுவாசலும்
அவற்றின் கொல்லைப்புறத்துக்குச் செல்லவும்
விருந்தினர் விடுதிக்குப் போகவும்
வரவேற்பறையில் தங்கவும்
ஏன் கழிப்பறைக்குக் கூட.

மையல் நிரம்பிய அந்த
விளம்பரத்தட்டிகளுக்கு
ஒரு போதும் அன்பும் கருணையும் இல்லை
என்றான் அருகில் பேருந்துக்காக காத்துநின்ற
யாரோ ஒருத்தன்
என் கண்களிலிருந்து வெளியேறிய
உலர்ந்த விருப்பங்களைக் கண்டு.

நைந்து போன சிறிய நோட்டுகள்
சில அவனிடம் இருக்கலாம்
குழந்தைகளுக்காக திராட்சையையும்
இனிப்பையும் வாங்கிப்போக முடியாமல்
நான்கைந்து நாட்களாகவே
திணறியபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அவனிடம் எந்தத்தீர்மானமுமில்லை
அந்தக்காசு குழந்தைகளுக்கான பழமாகுமா
கடன்காரனின் பேச்சையடைக்குமா என்று.

ஒரு சல்லிக்காசு இல்லாதவனை
சிறிய பற்பொடிப் பையும்
கவனங்கொள்வதில்லை
கடையிலிருக்கும் எல்லாப்பொருட்களும்
அவனை  தொலைவிலேயே நிறுத்தும்போது
அவனைக்கடந்து போகின்றன
விரைவாக எல்லா ஊர்திகளும்
விலக்கப்பட்ட பொருளொன்றை விலக்கிக் கொண்டதாக.

விரைந்து செல்லும் வண்டிகளுக்கிடையில்
நடந்து செல்வோருக்கென்று
விதிக்கப்பட்ட இடத்தில்
கிடைக்கும் சிறு அவகாசத்தில்
அவனுடைய உயிரும் வாழ்வும்
இந்தப்பக்கமிருந்து அந்தப்பக்கமாக
கடந்து விடவேணும்.

அப்போதும் அந்த விளம்பரத்தட்டிகள்
நம்மைப்பார்த்து கேலிசெய்கின்றன
காசில்லாதவரின் கைகளை
எப்படி அவற்றுக்குத் தெரிந்து விடுகிறது?
யாருக்கு சிரிப்பதென்றும் கூட.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொம்மைக்கும் கத்திக்கும் தெரிந்தது

ஒரு பொம்மைக்குத் தெரிகிறது
மகிழ்ச்சியைப் பெருக்கும் மொழி என்னவென்று
ஒரு மலருக்குத் தெரிகிறது
நிறங்களாவதும் வாசனையாவதும்
எப்படியென்று
ஒரு வண்டுக்குத் தெரிகிறது
நிறத்திற்கும் வாசனைக்கும் சேதாரமில்லாமல்
தேனை எடுப்பது எங்ஙனமென்று
ஒரு பகலுக்குத் தெரிகிறது
இரவிடம் பிடிபடாமல்
விடைபெறுவது எவ்வாறென்று
ஒரு நதிக்குத் தெரிகிறது
நிலம் தனக்களித்த பரிசு எதுவென்று
இந்த வெயிலுக்குத் தெரிகிறது
கோடையில் தீப்பிடிக்காமலும்
மாரியில் இறுகிக்கட்டியாகாமலும்
இருப்பதெப்படி என்று
ஒரு பறவைக்குத் தெரிகிறது
விண்ணின் சுவையும் மண்ணின் காதலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கத்திக்குத் தெரிகிறது
கொலைக்கு எப்போதும் தான் தயாராக இருப்பதை
எனது புத்தகங்களுக்குத் தெரிகிறது
தங்களுடன் கொண்டாடுவதற்கு
சொற்களும் நானும் பொருந்தும் கணங்கள் எதுவென்று
எனக்குத் தெரியவில்லை
அடுத்துவரும் கணத்தில்
நான் யாதாயிருத்தல் கூடுமென்றும்
எதுவாயிருத்தல் தகுமென்றும்

விசையோடு மாறிச் செல்லும்
காலக்கல்லில் மோதித்துகளாகும் ஒற்றை நட்சத்திரம்
ஆனேன்
நான்,

நீயும்தான்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு

எடுத்துச்செல்ல முடியா
நினைவுகளைப்பரிசளித்தாய்
இனிக்கும் முட்களாயும்
குளிரும் தணல்களாயும்

அவை எப்போதும் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன
மாரிகாலச் செடிகளாய்
பிரியத்தின் முகங்கள்
இத்தனை அழகாய்த்தானிருக்கும் என்று உரைத்தபடி
நீ விட்டுச் சென்ற
கை நிரம்பி வழியும் ஒளிக்குவியல்கள்
பெருகி வருகின்றன
இந்த மண்டபத்திலும் முற்றத்திலும்
உனது குரலோடும் அசைவுகளோடும்

நம் முற்றத்தில் இனி
உன் வரவினிச் சாத்தியமில்லை என்றபோதும்
காத்திருக்கிறேன்

எந்தச் செடியும் பூக்கவில்லை
நீயிருந்தபோது பூத்ததைப்போல
நீ தொட்டபோது மணத்ததைப்போல.

பிரிவின் வெளியில்
நிறைந்து கொண்டிருக்கின்றன
இனிக்கும் வண்ண முட்கள்
குருதியொழுக

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயப்பூ

நிறமற்ற மலரொன்று
அலைமீதில் தவழ்ந்தது அவ்விரவில்
பிறகு, கடலாகி விரிந்தது
பகலில் கரைந்து

அதில் அலைகள் தளும்பின
கடலாய் விரிந்த அம்மலரில்
வாசனையோடும் நிறங்களோடும்

வானவில்லின் நிழல் நிரம்பிய பைகளோடு
வந்த யாத்திரீகன்
எடுத்துவைத்தான் அவ்விரவு முழுதும்
ஓராயிரம்
குளிர்ந்த கண்ணாடி மலர்களை.
அவற்றிலிருந்து நதிகள் பெருகிக் கொண்டிருந்தன
அலைகளோடு

ஒளிமிக்கதாகி வந்த அவ்விரவில்
முதலில் வானம் வெளுத்தது
பிறகு
கடல், மலை முகடுகள், காட்டின் விளிம்பு
எல்லாம் ஒளிர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன ஆச்சரியம்
அத்தனை கண்ணாடி மலர்களும்
ஒன்றாகத்திரண்டு சிவந்தன ஒரேபூவாய்.
பிறகு அம்மலர்
வெண்ணிறமாகி நிறமிழந்தது

நிறமிழந்து மலராகிய அது
அலைமீதில் தவழ்ந்தது இன்னோரிரவில்

மீண்டும் வானவில்லின் நிழல்களோடு
யாத்திரீகன்
இரவிரவாக குளிர்ந்த கண்ணாடி மலர்களை
எடுத்துவைத்துக் கொண்டேயிருந்தான்...

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகு முளைத்த குழந்தைகள்

பள்ளியிலிருந்து திரும்பிவந்தவுடன்
வீடு நிரம்ப
அவன் வைத்துச் சென்ற ஏராளம் முகங்களிலுமிருந்து
சிலவற்றை அணிந்துகொண்டு
மரங்களோடும் பறவைகளோடும் விளையாடினான்
பிறகு அவனுடைய கூட்டாளிகளும் வந்தார்கள்
வெவ்வேறு விதங்களிலான முகங்களோடும்
குரல்களோடும்

முற்றத்தில் வானத்தை இறக்கி
அதில் வண்ணமிட்டார்கள்
திசைகளை மாற்றி
நிறங்களை மாற்றி
கோணங்களை மாற்றி
விரும்பிவாறெல்லாம் குழைத்தார்கள்
பூமி ஒரு பலூனாகவும் பொம்மையாகவும்
சுவிங்கமாகவும் மாறிக்கொண்டிருந்தது

அந்தப்பின்னேரத்தை அவர்கள்
பழமாக்கி உண்டார்கள்
பொழுது ஒரு தீராப்பானமாகிக் கரைந்துவர
அதை அவர்கள் பருகினார்கள்
அவர்களிடம் சிறகுகளிருந்ததை
அப்போது நான் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு, ஆழ்ந்து உறங்கிய குழந்தையைச்சுற்றி
கனவு முட்டைகள் மிதந்து கொண்டிருந்தன.
காலையில்
எழுந்த குழந்தை
பள்ளிப்பையில் அடைந்து கொண்டிருந்தான்
புத்தகங்களுக்கிடையிலும் குறிப்பேடுகளிலும்
திணறிக்கொண்டிருக்கும்
பதற்றத்தையும் நெருக்கடியையும்.

கனவு முட்டைகள் நொருங்கிக் கிடந்தன வெளியே.

பறக்கவும் நதியாகிக் குதித்தோடவும்
ஒளியாகிப் பரவவும்
மலரவும் தெரிந்த குழந்தைகயை
எதுக்காக பள்ளிக்கு அனுப்பவேணும்
என்றெனுக்குப் புரியவில்லை.

பாழாய்ப்போன இந்த
நாறும் வாழ்வையும்
புழுத்த நாட்களையும் தள்ளுவதற்காக
அவன் பள்ளியில் பயிலவும் பழகவும் வேணும்
என்றாள் மனைவி

அதுவும் சரிபோலத்தான் பட்டது
பிழையென்று தெரிந்தபோதும்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹர்த்தால்

இரைச்சலடங்கித்தணிந்தது நகரம் அன்று

நிகழாத பயணங்களின்
வெற்றிடத்தில்
தன்னை அவிழ்த்துக் கொண்டு ஓய்ந்திருந்த
நகரத்தில்
எல்லாக்கதவுகளும் மூடப்பட்டிருந்தன
எல்லா வீதிகளும் திறந்திருந்தன

தங்கள் கோரிக்கைகளையும்
இயலாதபோது எழும் ஆற்றாமையையும்
சொல்லும் மொழியை
பகிரங்கப்படுத்த விரும்பிய சனங்கள்
தெருக்களைத் தனிக்க விட்டார்கள்
நகரத்தின் எல்லாக்கதவுகளையும் மூடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடி வடிந்த நிலப்பரப்பெனக்கிடந்த
அந்த நகரத்தில் அன்றும்
வரவுமின்றிச் செலவுமின்றிய நிகழ்வுகளிலும்
லாப நட்டக்கணக்குகளின் புள்ளிவிவரங்கள் அசைந்து
கொண்டிருந்தன

ஓடாத பேருந்துகளுக்கும் பிற வண்டிகளுக்கும்
ஓட்டுநர்கள் இருந்தார்கள் அன்றும்.
அப்படியே திறக்காத வங்கிகளுக்கும்
அலுவலகங்களுக்கும்
பள்ளிகளுக்கும் சந்தை தெருவுக்கும் ஆட்களிருந்தார்கள்.
ஆனால் யாருமில்லை அப்போது
வெற்றிடங்களைத்தவிர

என்ன வேடிக்கையென்றால்
யாருமில்லாத தெருக்களிலும் சந்துகளிலும்
சுவரொட்டிகளின் நிரந்தரமான
முறையீட்டையும்
கோரிக்கைகளையும் கண்டு
ஒரு கணம் திடுக்குற்றது நகரம்.

எதுவும் செய்ய முடியாமல் தான் தனித்துவிட்டதை
அப்போது, உணர்ந்தது அது.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்

காயமறுக்கும் இந்தக்குளிரை
இன்னும் வைத்திருக்க வேணுமா மடியில்
என்று கேட்டாள்
பேருந்திலேயே அறிமுகமாகி
அதிலேயே விடைபெற்ற
தோழி

அவள் அறிவாளா
அந்தக்குளிர்
எங்கோவோர் தொலைவிலிருந்து
மலைகள் அனுப்பிய மூச்சென்று

இல்லை
வயல் வெளியிலும் ஓடையிலுமிருந்து
முளைத்து வரும்
புன்னகைதான் அதுவென்று

ஓடும் பேருந்தினுள்ளே தாவியேறியதா
அல்லது கள்ளமாய்ச் சன்னல்வழி உள்நுழைந்ததா
கடலலைகளில் நீந்தி நீந்தி
நடனம் பயின்ற அக்குளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெப்போதும் அறிமுகமில்லாத தோழி
அருகிருந்தாள் தத்தி விளையாடும் குளிரோடு
அருகில்,
அருகருகாக
அந்த இருக்கையில்.

நமக்கிடையில் விளையாடிய அக்குளிர்
விடைபெற்றுச் செல்ல முன்
இறங்கிவிட வேணும்
அடுத்த நிறுத்தத்தில் நான்

குளிர்
என்னுடனா
அவளுடனா
இல்லைத்தனி வழியே தானா.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிப்பு

மஞ்சள் வெயில்
இளங்காலையில்
ஒரு காட்சி கண்டு அதிசயித்தது
சிறு குருவியொன்று

நிலத்தில் படிந்து
ஓடிக்கொண்டிருந்தது ஆறு.
ஆற்றிலும் நிலத்திலும்
ஊடுருவி
மெல்ல இறங்கிக் கலந்தது
ஒளி.

கோடானு கோடி ஆண்டுகளாய்
நீளும் இயற்கைச் சங்கமத்தின்
அழியா நுட்பங்கொண்டு அதிசயித்த
குருவி
தன்னையும் கண்டது
மரமும் தானும்
அவ்வியற்கைப் பிணைப்பின் கண்ணியென்று.

குருவியைக் குறுக்கறுத்து
சாலை வழி போனது
பேருந்தொன்று பேரதிர்வுடன்

ஒரு கணம் கலங்கிச் சிதைந்து
மறுபடியும்
கூடியது இயற்கைப் பெருவெள்ளம்.

கண்டு சிரித்தது குருவி.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாளைக்கத்தி

கள்ளின் வாசனையோடிருந்தது
திண்ணையில் பாளைக்கத்தி
பனையின் சுவையை நினைத்தபடி
பாடல் கோடி பெருகிவர

கோடை வெயில்
நாயைச் சுருட்டி
ஒரு மரத்தின் கீழே எறிந்திருந்தது
இன்னொரு நாய்
நடுத்தெருவில் நின்றுருகியது
அது கோடை என்று தெரிய

இன்னும் வரவில்லை
இராப்பாடகன் இந்தப் பகலிலும்.
நேற்றிரவும் பாடல் இல்லை
இன்றிரவும் அவன் வரக்கூடுமோ

மொந்தையில் கள் கிடந்து
புளிக்கிறது
அவன் குரல் தேடி
அவன் ஆலாபனைகளைத்தேடி

இரவின் வெறுமை
இந்தப்பகலிலும் தடித்து வளருகிறது
அவன் பாடலற்ற
வெளியின் வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளை உறிஞ்சி அவன் குடிக்கும் போதில்
இந்தப் பூமியின் அத்தனை ரகசியங்களும்
அவனிடம் சென்று சேர்கின்றன
சொற்களாகவும் பாடலாகவும்
போதை தரும் கலவரம் நிரம்பிய உண்மைகளாகவும்
கூடவே அவனே ஞானியாகவும் வளர

திடீரென்று
இரவெல்லாம் அலைந்து
களைத்த கள்வன்
பகலில் வந்தான் கள்ளின் மணந்தேடி
அந்தத்திண்ணைக்கு.
திண்ணையில் விழித்திருந்தது
குருதி வாசனையோடு
பாளைக்கத்தி

அவனே கள்வன்
அவனே பாடகன்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளம்

உடுக்கொலியில் விழித்திருந்த இரவில்
கரைகளுள் அடங்கியிருந்த குளம்
வானத்தை தன்னுள் அணைத்திருந்தது.

தண்ணீருக்குள் குளிர்ந்த நிலா
எறிந்தது
அதே குளிரொளியை.
அணையாத நட்சத்திரங்கள்
குளத்தை
வானமாக மாற்றியிருந்தன

வானத்துக்கும் குளத்துக்குமிடையில்
ஒரு வினோத உலகத்தை நிர்மாணிக்க
இராப்பறவைகள் பறந்துகொண்டிருந்தன.
குளத்தில் பிரதிபலித்தது
பறவைகளின் அந்த வினோதப்பாதைகளும்
அவற்றின் ஊஞ்சலும்.

என்னதான் இருந்தாலும்
எத்தனைதான் பிரமாண்டமானாலும்
ஒருபோதும் வானத்தில்
பிரதிபலிப்பதில்லை குளம்.
குளத்தின் மடியில் இராப்பகலாய் அது
அணைந்திருக்கின்றபோதும்
அறிந்ததில்லை
குளத்தின் ஆழ்ரகசியங்களையும்
எல்லையற்ற அதன் கருணையையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைக்கு வாய்த்ததில்லை
வானத்தைத் தன்னுள் கொள்ளும்
குளத்தின் வல்லமையெதுவும்.

உடுக்கொலி
தண்ணீரின் மேல்
நிறமற்ற கண்ணாடித் தகடாகப் படிய
குளத்தில் பூக்களும் கொடிகளும்
வானத்தின் நட்சத்திரங்களும்
நிலவும் கலந்து
கனிந்தது குளம்
சுவையூறித்ததும்பியது வெண் நீலப்பழமாக.

நாங்கள் இறங்கினோம்
பானமாய் நிரம்பிய அந்தப்பெரும் பழத்தில்
அலைகள் முன்னகர
நிர்வாணமாய்.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலூனில் விட்டுச் சென்றது

முடிதிருத்துவோனிடம் தினமும்
வந்து போவோர் விட்டுச் செல்வது
என்னவென்று நினைக்கிறீர்கள்

அங்கே குவிந்திருக்கும்
கத்தரித்த முடிக்கற்றைகளையா?

இல்லவேயில்லை

கைமறதியாய் வைத்த பொருளெதுவுமா?

அதுவுமில்லை

சுழலும் நாற்காலியில் ஆயுதந்தாங்கியோனின்
முன்னே
பேச்சற்று நிராயுதபாணியாய்
நீங்களிருந்த அந்தக்கணங்களில்
அவனுடைய எல்லா நிபந்தனைகளுக்கும்
நீங்கள் தலைசாய்த்தீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போததை உங்களுக்கே காட்டியது
உங்கள் முன்னிருந்து உங்களைக்காட்டிய
கண்ணாடி.

நீங்கள் விட்டுச் சென்ற அந்த நிலை
மீண்டும் அந்தச் சுழலும் நாற்காலியில்
அவனின் முன்னே நீங்கள் அமரும்போது
மறுபடியும் தோன்றும்

அந்தக் கண்ணாடியில்
தினமும் அங்கே எல்லோரும் விட்டுச் செல்லும்
எல்லோருடைய நிலையும்
வாசனையும் நிறமும் மாறாமல் சேமிக்கப்பட்டுக்
கொண்டேயிருக்கிறது.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குத் தெரு

நாங்கள் கிழக்குத் தெருவிலிருந்தபோது
கிழக்கு எங்கேயிருந்தது என்று கேட்டான்
தம்பி
அப்போது அது வேடிக்கையாக இருந்தது
எங்களுக்கு

இப்போது எங்கள் தெருவுக்கு கிழக்கே
இன்னொரு தெரு வந்திருக்கிறது
எது கிழக்குத் தெரு என்று தெரியவில்லை
எல்லோருக்கும்
இந்தச் சுற்றும் உலகில்.

பிறகு நாங்கள் மேற்குத் தெருவில்
இருந்தோம் என்று சொன்னார்கள்

ஆனால்
அப்போதும் இப்போதும்
நாங்கள் ஒரே தெருவில்தான் இருக்கிறோம்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாத்தாவின் தென்னைகள்

இந்தத் தென்னைகளை
தாத்தா நாட்டியிருந்தார்
நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே' என்றார் அப்பா

இப்போது ஒவ்வொரு தென்னையும்
தாத்தாவை நினைவூட்டியபடி நிற்கின்றன
காய்த்துக் குலுங்கி
காற்றுடன் பேசி

தாத்தா இல்லாத போதும்
எந்த நிபந்தனையுமில்லாமல்
எல்லாவற்றையும் தந்து கொண்டிருக்கும்
அவை
காற்றில் பாடுவதை ஒருநாள் கேட்டேன்:

தாத்தாவின் பெயரை
சொல்லிக் கொண்டிருப்பதையும்
தாத்தாவுக்காகவே அவை
காய்த்துக் குலுங்குவதையும்

இந்தத் தென்னைகளை தாத்தா நாட்டியது
எங்களுக்காகவா
இல்லை
தென்னைகளின் வம்சம் பெருக்கவா?
இல்லை
தன்னை நினைவூட்டவா?
இல்லை
நாங்களும் தென்னைகளை நாட்டவா?

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவன்

இன்னும் அவன் வரவில்லை
காத்திருக்கிறது மரம் தவிப்போடு

அது அவனுடைய மரம்
அவன் வந்து காத்திருக்கும் மரம்
இப்போது அவனுக்காக
காத்திருக்கிறது அது

வந்து கொண்டிருக்கிறது பேருந்து
அவனைத்தேடி
அவன் இன்னும் வரவில்லை
அவனை அழைத்துப் போகமுடியாத
துக்கத்தோடு
அவனுக்காக காத்திருக்கவும் முடியாத
தத்தளிப்போடு
அது போகிறது பயணம்

அவனுடைய பயணம்
அன்று
நிகழமறுத்து
எங்கோ தங்கிவிட்டது

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சிப் பெண்

தொலைக்காட்சியில் ஆடும் பெண்ணைக்கண்டதும்
சிரிப்பு வந்தது உங்களுக்கென்றால்
சிரிக்கும்படியாகவா ஆடினாள்
என்றொரு கேள்வியை நான் துவக்க முடியும்

நமக்கேன் வீண் வம்பென்று
விலகிய பூனையாகிப் போகலாம் நீங்கள்
அதனாலென்ன
ஆடும் பெண்ணுக்கு
ஆடுவது அழகும் குஷியும்
நீ விரும்பினால் ருஷி
விட்டால் கிட பசி' என்றான்
தொனிமாறாமலே அந்த நிகழ்ச்சித்தயாரிப்பாளன்

ஆடும் பெண் தன்னைத்
தின்னக் கொடுக்கிறாள்
ஒவ்வொரு நொடியிலும்

எல்லோரும் அவளைத்தின்னத் தின்ன
அவள் ஒரு தீராப்பண்டமாகிறாள்

யாராலும் தின்று முடியாப்பண்டம்
அவள் என்று
தின்றவரெல்லாம் உணர

காலம்
அந்தப்பண்டத்தின் சுவையை
வேறொரு பெண்ணிடம் மாற்றிவிடுகிறது.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கானல்

கானல் பெருத்து
காடுகளின் மீது படர்ந்தது
புலிகளும் வெளியேறிப்போய்விட்டார்கள்
மட்டக்களப்பின் வாவிகளில்
பருந்துகள்
வெள்ளைக் கொக்குகள்
வாவிக்கரைகளிலோ
நரிகள் காத்திருக்கின்றன

அபாயச்சங்கொலி கேட்கிறது
பாங்கொலி எங்கே
பாங்கொலி எங்கே
தொழுகைக்குப்போன வாப்பாவைக்காணவில்லை என்று
பிள்ளைகள் தேடுகிறார்கள்
பிள்ளையான் கொண்டேகினான்
வாப்பாவை' என்று
அவர்களுக்குத் தெரியவந்தபோது
பிள்ளையானுக்கும் அவனின் கூட்டாளிகளுக்குமிடையில்
தகராறாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது வாப்பாவைப்பற்றி
யாரிடம் கேட்பது
வாப்பாவைத்தேடிய பிள்ளைகள்
தூண்டில் போடப்போகின்றன வாவிக்கு
வாவிக்கரையில்
நரிகள்
வாவிக்கு மேலே
பருந்துகள்
வெள்ளைக் கொக்குகள்.

மந்தைகளுக்கும் இடமில்லை
சந்தி ஆற்றுவெளியிலும்
மேயன் கொல்லையிலும்
வெற்றிலை போட்ட மடுவிலும்
மந்தைகள் மேயும் இடங்களில்
'ஆமிக்காம்ப்'
சென்றிப் பொயின்ற்'கள்.

பின்னேரங்களில்
பந்தடிக்கப்போகும் சின்னக்காக்காவின்
மூத்த பெடியனையும்
முந்த நாள் கடத்திக்கொண்டு போய் விட்டார்கள்
பள்ளியில் அவசர கூட்டம் போட்டார்கள்
அறிக்கைகள்
கண்டனங்கள்
ஹர்த்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் விசுவாசமாகவே நடந்தன
ஆனால்
பெடியன் மட்டும் வீடு திரும்பேல்லை.

சின்னக்காக்காட பொஞ்சாதி
அன்னந்தண்ணியில்லாம பெரண்டு கிடக்காவ' என்று
காதம் பீபி
சொல்லி அழுகிறா
காதம் பீபியும்
சின்னக்காக்காவின் மனிசியும்
நல்ல கூட்டு.

புலிகள்,
அதிரடிப்படை
கருணா குழு
பிள்ளையானின் ஆட்கள்
ஜிகாத்
இதெல்லாம் இனி
பாடப்புத்தகத்திலும் வருமா
என்று கேட்கிறாள்
அஷ்ரபாவின் சின்னமகள்

என்ட அல்லாவே யாருக்குத் தெரியும் இதெல்லாம்'
அஷ்ரபாவின் துக்கத்தால்
அன்று இரவு அவிந்தது.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலாவுதீன்

அலாவுதீனிடம் அற்புத விளக்கை
இரவல் கேட்டேன்
அது கொள்ளைபோய்விட்டதையெண்ணி
அவன்
மூன்று நாட்களாக அழுது கொண்டிருப்பதாக
அவனுடைய துணைவி சொன்னாள்
துக்கமுடன்

இனி அலாவுதீனின்
வம்சமும் தெருவில்தானென்றாள்
அவள்
கண்ணுடைந்து

நான் திரும்பும்போது பாதைகளிருக்கவில்லை
ஊரடங்குச்சட்டம்
எல்லாப் பாதைகளையும்
சிப்பாய்களுக்கும்
துவக்குகளுக்கும்
தாரைவார்த்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைவண்டித் தொடரணிக்கு
வழிவிட்டு
வீடுகளுள் ஒடுங்கியிருந்தார்கள் எல்லோரும்.

பீரங்கிகளின் தாகத்துக்கு
எதை நிரப்புவது
கண்ணீரையா
பலியிடப்படுவோரின் குருதியையா
துளிர்க்கத்துடிக்கும் நாட்களையா?

எல்லாத் திக்குகளிலும் துடிக்கின்றன
கண்ணீர்த்துளிகளும்
சிதறிய கனவின்
தாகம் நிரம்பிய
அலைகளும்

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சனை

ஒரு அதிகாலை
எந்தப்பதற்றமு மில்லாமல்
நம் காலடிக்கு வந்தது
அதை நான் நம்பவில்லை.

ஒளிமிகக் கொண்டிருந்த அக்காலையில்
எங்கோ சிரிப்பொலியோடு
சென்றது காற்று
நான் அதை நம்பவில்லை.

என்னை நிறமூட்டிச் சிலிர்க்க வைத்த
சூரியன்
ஒரு கிண்ணத்தில் அமைதியானதொரு
பகலாக இருந்தது
நான் அதைப்பருகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாருடைய கோபமுமில்லாமல்
ஒரு மாலை நிறங்கொண்டது
சிவப்பாய்.
நான் அதைக் கண்டேன்.
பறவைகளை
அவற்றின் இருப்பிடந்தேடி
அழைத்துப் போன பின்னந்தியில்
போக்கிடமற்றுத் தெருவில் நின்றேன்
பதற்றத்தோடு.

மறுநாள் பதற்றத்தோடு வந்தது அதிகாலை
நான் அதை நம்ப மறுத்தேன்
அது பதற்றமாகவே இருந்தது
தன்னை நம்பும்படி
அடம்பிடித்துக் கொண்டு.
ஆனாலும் நான் அதை நம்பவில்லை.

00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே வெளியாகிய கவிதை நூல்கள்



ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்



ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்





பலி ஆடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறுபடியும் மறுபடியும் எல்லாவற்றையும் சொல்லவும் திரும்பத்திரும்ப எல்லாவற்றையும் செய்யவும் வேண்டிய மனித விதி எல்லா அறிவியலையும் கேள்வியின் முன்னே நிறுத்துகிறது. எதுவுமல்ல எதுவும் என்ற புரிதல் உணரும் கணம் இத்தருணமே. வேறுபாடுகள், முரண்கள் எல்லாமே அழகுதான், பேதங்களும் ஏற்ற இறக்கங்களும் இல்லாதவரை. நினைவுகளின் சுமை எல்லாவற்றையும் விட அதிக பாரமானது. இந்தக் கவிதைகள் இப்படியே பலவற்றின் நிழலாயும் ஒளியாயும் இருக்கின்றன. சாட்சி, எதிர்ப்பு, விலகல் என்ற நிலைகளில் இயங்கிய ஒரு மனநிலையை இவை பிரதிபலிக்கின்றன.

ம கி ழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org